V12T 12404

விருதுநகர் மாவட்டம்

முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

வகுப்பு 12

கால அளவு: 1.30 மணிநேரம் பொதுத் தமிழ் மதிப்பெண்கள்: 50

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10×1=10

1) இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்

அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம்

இ) தண்டியலங்காரம் ஈ) யாப்பருங்கலக்காரிகை

2) 'மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது

தன்னேர் இலாத தமிழ்' - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம்

அ) அடி மோனை, அடி எதுகை ஆ) சீர்மோனை, சீர் எதுகை

இ) அடி எதுகை, சீர் மோனை ஈ) சீர் எதுகை, அடி மோனை

3) பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க

அ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது

ஆ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்

இ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன

ஈ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.

4) யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து உணர்த்தும் திணைகள் முறையே ...............

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை

இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

5) **பொய்யாவானம்** புதுப்பெயல் பொழிந்தென - தடித்த சொல்லின் இலக்கணக்குறிப்பு

அ) உரிச்சொல் தொடர் ஆ) இடைச்சொல் தொடர்

இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஈ) எதிர்மறைப் பெயரெச்சம்

6) வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) மணல் அள்ளுதல் ஆ) பருவநிலை மாற்றம்

இ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல் ஈ) பாறைகள் இல்லாமை

7) பொருத்துக

அ) குரங்குகள் - 1. கன்றுகளைத் தவிர்த்தன

ஆ) விலங்குகள் - 2. மரங்களிலிருந்து வீழ்ந்தன

இ) பறவைகள் - 3. குளிரால் நடுங்கின

ஈ) பசுக்கள் - 4. மேய்ச்சலை மறந்தன

அ) 1, 3, 4, 2 ஆ) 3, 4, 2, 1 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4

8) இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது

அ) வக்கிரம் ஆ) வஞ்சனை

இ) அவமானம் ஈ) இவை அனைத்தும்

9) 'சிறை' - என்ற நூலின் ஆசிரியர்

அ) இராஜாஜி ஆ) பூமணி

இ) அனுராதா ரமணன் ஈ) சுந்தர ராமசாமி

10) மாறுபட்டதை எடுத்தெழுதுக

அ) வயிறுகள் ஆ) கருவேலம் பூக்கள்

இ) அறுப்பு ஈ) ரீதி

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**II. குறுவினா (எவையேனும் நான்கனுக்கு விடையளி).** **4×2=8**

11) நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

12) கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

13) 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.

14) புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக.

15) நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?

**III. மொழிப்பயிற்சி இலக்கணம். எவையேனும் நான்கனுக்கு விடையளிக்கவும்** **4×2=8**

16) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) வானமெல்லாம் ஆ) அருங்கானம்

17) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) கலங்கி ஆ) பொலிந்தான்

18) **உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

கிணற்றுத் தவளை போல

19) **தமிழாக்கம் தருக.**

Knowledge of languages is the doorway to wisdom

20) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

21) **தமிழாக்கம் தருக.**

அ) Archive ஆ) Tips

**IV. சிறுவினாக்களுக்கு விடையளி. (இரண்டு மட்டும்)** **2×4=8**

22) சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

23) பேரிடர் மேலாண்மை ஆணையம் விளக்கம் தருக

24) தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

25) 'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**V. நெடுவினா.** **2×6=12**

26) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

27) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

28) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

**(அல்லது)**

29) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் ………… கதையை தொடர்ந்து எழுதுக.

**VI. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **1×4=4**

30) 'ஓங்கலிடை வந்து' எனத் தொடங்கும் தண்டியலங்காரப் பாடல்.

- - - - - -

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com